# கிறிஸ்துவின் செயல் எல்லாருக்கும் சென்றடைகிறது (தீத்து 2)

*"... தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத் தக்கதாக" (2:9).*

தங்களைத் தாங்களே அருவருப்பானவர்களாக, கீழ்ப்படியாதவர்களாக மற்றும் கொள்கையற்றவர்களாக இருக்கும்படி அனுமதிக்கும் மக்களுக்கு நேர்மாறான வகையில், தீத்து "ஆரோக்கியமான உபதேசத்தை"[1] (2:1) பேசுவதினால் மோசம் போ(க்)குதலை வெல்ல வேண்டும் என்று பவுல் விரும்பினார். மாசுற்றவர்கள் சத்தியத்தின் மூலமாக வடிகட்டப்பட்டால் தூய்மையானவர்களாக முடியும்!

பவுல் எல்லாக் கிறிஸ்தவர்களின் ஏற்புடைய அன்றாட நடக்கையைப் பற்றிக் கலந்துரையாடுகையில் நடைமுறைப் பயன்பாட்டை ஆரோக்கியமான உபதேசத்தின் அடிப்படையில் அமைத்தார் (2:1-10). தேவனுடைய கிருபையே எல்லாக் கிறிஸ்தவ நடக்கைக்கும் அடிப்படையாக உள்ளது (2:11-15) என்று அவர் கூறினார். கிரேத்தா தீவின் மக்களுடைய (கெட்ட) பெயரின் வெளிச்சத்தில், அவர் தேவனுடைய கிருபையின் மூலம் எல்லாரும் இரட்சிக்கப்பட முடியும் - மற்றும் அவருடைய (தேவனுடைய) தெய்வீக திட்டத்தின் அங்கமாயிருக்கும் வாய்ப்பை யாவரும் அரவணைத்துக் கொள்ள வேண்டும் - என்று அவர் வலியுறுத்தினார்.

## பாடம் 3: எல்லாக் கிறிஸ்தவர்களின் நடக்கை (2:1-10)

அதிகாரம் இரண்டில், தூய உபதேசத்தின் வல்லமையை அறிவித்தல் என்பது மட்டுமின்றி, அது எல்லாக் காலத்திலும் உள்ள மக்களுக்கு உதவுவதற்கு நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்பதும் வலியுறுத்தப் படுகின்றது. இங்கு, 1:5ல் தீத்து செய்யும்படி பவுல் கேட்டுக் கொண்ட "நிறைவாக்குதல்" என்பது முதிர்வயதுள்ள மனிதர்கள் (2:2), முதிய மற்றும் இளம் வயதுள்ள பெண்கள் (2:3-5), இளம் ஆண்கள் (2:6-8) மற்றும்

ஊழியக்காரர்கள்/வேலைக்காரர்கள் (2:9, 10) உள்ளிட்ட குறிப்பிட்ட குழுக்களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. ''நிறைவாக்குதல்'' என்பதின் இலக்கானது ஆரோக்கியமான உபதேசத்தின் மூலம் சாதிக்கப்பட முடியும்.

## முதிர் வயதுள்ள ஆண்கள் (வ. 2)

முதிர் வயதுள்ள ஆண்கள் வழிநடத்துவதற்கானவர்களாகவே தேவன் எப்பொழுதும் கணக்கிட்டுள்ளார் (எண். 11:16, 17; எரே. 19:1, 2ஐக் காணவும்). பக்குவம் வாய்ந்த மனிதர்கள் "ஜாக்கிரதையுள்ளவர்களாய்"[2] இருக்கும்படி பவுல் அழைத்தார் (2:2). விசேஷமாக இச்சொற்றொடரானது ஒரு மனிதர் தம் வாழ்விலும் உறவு முறைகளிலும் ஏற்றுக் கொண்டு உட்கிரகித்துள்ளவற்றைக் கவனிக்கின்றதை அடையாளப் படுத்துகின்றது.

முதிர்வயதுள்ள ஆண்கள் "நல்லொழுக்கம்"[3] உடையவர்களாய் இருக்க வேண்டும். அவர் மாதிரியை அமைப்பவர் என்ற வகையில் புரிந்துணர்ந்து கொள்ளப்பட வேண்டும். தகுதி வாய்ந்த சமூகத் தொடர்புகளை உற்சாகப்படுத்துவதில் இப்படிப்பட்ட மக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் இருக்கின்றார்கள்!

அவர் "தெளிந்த புத்தி"[4] உடையவராய் இருக்க வேண்டும். சுயகட்டுப் பாட்டின் இந்த முன்மாதிரியானது மற்றவர்களில் பலவீனத்தையும் அலைபாயும் தன்மையையும் கையாளுகின்ற அவசியம் கொண்டவருக்கு விலைமதிப்பற்றதாயிருக்கிறது.

அவர் "விசுவாசத்தில் ஆரோக்கியமாயிருக்க" வேண்டும் இங்கு பவுல் வசனம் 1ல் உபதேசத்திற்குப் பயன்படுத்திய அதே வார்த்தையை (Gk.: *hugiaino*) பயன்படுத்தினார், இம்முறை இதை அவர் ஒருவரின் விசுவாசத்துடன் இணைத்துப் பயன்படுத்தினார். நாம் இந்த உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக விசுவாசம் விளங்குவதால் (1 யோவா. 5:4), கிரேத்தர்களை உலகின் வழிகளில் இருந்து திருப்புவதில் தீத்துவுக்கு உதவிகரமாய் இருப்பதற்கு இது எவ்வளவு இன்றியமையாததாக இருந்திருக்க வேண்டும்! (ரோமர் 4:20; 1 கொரி. 16:13; கொலோ. 2:7 ஆகியவற்றைக் காணவும்).

அவர் "அன்பில்" (Gk.: *agape*) ஆரோக்கியமாயிருக்க வேண்டும். இந்தச் சொற்றொடரானது வாழ்வின் பல முகப்புக்களை சாதகமானதொரு வழியில் உள்ளடக்குகிறது. 1 கொரி. 13:1-8ல் அன்பு பற்றிய விவரிப்பில் உங்கள் சொந்தப் பெயரை(அல்லது "கிறிஸ்தவர்" என்ற வார்த்தையை)ப் பயன்படுத்துங்கள். அன்பு என்பது நிச்சயமாகவே பிறரின் நலனுக்காக வெளிச் சென்றடையும் ஒரு செயல் விளக்கமாக உள்ளது. வேத வசனங்களில் தரப்பட்டுள்ள வகையில் இது ஒரு அழகுமிக்க வார்த்தையாக உள்ளது; ஆனால் இதன் நடைமுறை மற்றும் பயன்பாட்டில் இது இன்றைய நாட்களின் மொழியில் மிகவும் தவறாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது.

அவர் "பொறுமையில்" ஆரோக்கியமாயிருக்க வேண்டும். உறுதியாய்

நிலைநிற்கும் இந்த மனிதர், மற்றவர்கள் பக்குவத்தை நாடி சோதனைகளினூடே செல்லுகையில் அவர்களின் அருகில் நிற்பார்.

## முதிர் வயதுள்ள மற்றும் இளம் வயதுள்ள பெண்கள் (வ. 3-5)

போதிக்கும் சூழ்நிலைகளில் பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றிருக்கையில்[5] முதிர்வயதுள்ள பெண்கள் தங்கள் படிப்பினாலும் சத்தியத்தைப் பகிர்ந்து கொள்வதினாலும் இளம் பெண்களுக்கு மாபெரும் ஆசீர்வாதமாய் இருக்க முடியும். அன்னாள் (லூக். 2:36-38) மற்றும் லோவிசாள் (2 தீமோ. 1:5) மற்றும் பிரிஸ்கில்லாள் (அப். 18:24-26) ஆகியோர் போன்ற பெண்கள் இரட்சகருக்கென்று ஆத்துமாக்களைப் பக்குவப்படுத்துவதில் மிகவும் உதவியாய் இருந்தார்கள். தேவபக்தியுள்ள பெண்கள், மாவில் புளித்த மா போல இராஜ்யத்தைப் பரப்புவதற்கு உதவுவார்கள் என்று கர்த்தர் அறிந்தார் (லூக். 13:21; கலா. 5:9).

### முதிர் வயதுள்ள பெண்கள் (2:3, 4அ)

1. முதிர்வயதுள்ள பெண்கள் "பரிசுத்தத்துக்கேற்ற விதமாய்"[6] நடக்க வேண்டும். இது அவர்களின் சிருஷ்டிகருடன் ஒரு நெருக்கத்தை உத்தரவாதப்படுத்துகின்றது (யாக். 4:8; நீதி. 31:30ஐக் காணவும்).

2. முதிர்வயதுள்ள பெண்கள் தங்கள் காலத்தையோ அல்லது நடவடிக்கையையோ "அவதூறு பண்ணுவதற்கு" ஒப்புவிக்கக் கூடாது. முதிர் வயதுள்ள பெண்கள் அபிப்பிராயங் கொள்ளுவதற்கும் பேசுவதற்கும் அதிகமான நேரத்தைக் கொண்டுள்ளார்கள். பவுல், அவதூறு பண்ணும் ஆவியை தடை செய்வதினால் இவ்விரு சாத்தியக் கூறுகளுக்கும் எதிராகக் காவலிருந்தார்!

3. முதிர் வயதுள்ள பெண்கள் "(அதிகமான) மதுபானத்திற்கு அடிமைப் படாதவர்களாய்" இருக்க வேண்டும். அடிமைத்தனம் என்பது, அந்நபர் அதை (குடிப்பழக்கத்தை) கட்டுப்படுத்துவதற்கு மாறாக குடிப்பழக்கமானது அந்நபரைக் கட்டுப்படுத்துவதை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது (நீதி. 20:1; 23:29-35). குடிவெறியேறிய ஒரு நிலையானது இவ்வசனத்தைப் பெருமளவுக்கு மீறுகின்றது. முதல் நூற்றாண்டின் உலகத்தில் மதுபானம் சாதாரணமான மற்றும் மருத்துவப் பயன்பாடுகளைக் கொண்டிருந்தது (1 தீமோ. 5:23). இன்றைய நாட்களில், இதன் பயன்பாடு எதிலும் கிறிஸ்தவரின் செல்வாக்கு ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும் (ரோமர் 14:21).

4. முதிர் வயதுள்ள பெண்கள் "நற்காரியங்களைப் போதிக்கிறவர்களாயிருக்க" வேண்டும். (லூக்கா 2:36-38; அப். 21:8, 9; பிலி. 4:2, 3; எபி. 5:11-14 ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திக்கவும்.) இந்தப் பகுதியின் வெளி அமைப்பில் பவுல் சில பெண்களை மாபெரும் போதகர்களாக அறிமுகப்படுத்தினார். தேவபக்தியுள்ள பெண்கள் பெற்றுள்ள திறமைகள் மற்றும் அந்தத் திறமைகளை அவர்கள் செயல்படுத்தும்படி தேவன் விரும்புகிற வட்டாரம்

ஆகியவை பற்றி ஒவ்வொரு சமூகமும் சபையும் கவனமாய்ப் படிக்க வேண்டும். இவ்விடத்தில் பவுலின் பணி ஒப்படைப்பில் பொது/வெளிப் படையான போதனையைக் காட்டிலும் அதிகமானவை உள்ளடக்கப் பட்டுள்ளன.

*5. முதிர்வயதுள்ள பெண்கள் "உற்சாக மூட்ட"[7] வேண்டும் (2:4)* இவ்வார்த்தையானது, சத்தியத்தினால் இயக்கப்பட்ட எதுவும் செய்யப் படும்படி காண்பதற்கான "முழுவதும் பின்பற்றித் தொடரும்" மாதிரி ஒன்றை மறைமுகமாய் உணர்த்துகின்றது. இளம் பெண்களின் பண்பு மற்றும் நடக்கையின் இந்த வார்ப்பித்தலும் மற்றும் உருவாக்கமும் பலமான மற்றும் மகிழ்ச்சியான குடும்பங்களைக் கட்டுவதில் அஸ்திபார நிலையாக உள்ளது. அடுத்த பகுதியில் பவுல் அந்தப் பயிற்சியின் திட்டவட்டமான குறிப்புகளை எடுத்துரைத்தார்.

## இளம் பெண்கள் (2:4ஆ, 5)

*1. இளம் பெண்கள் தங்கள் கணவரிடத்திலும் தங்கள் பிள்ளைகளிடத் திலும் "அன்புள்ளவர்களாய்"[8]* இருக்க வேண்டும். மனைவியும் தாயுமாய் இருக்கும் பெண்மணி ஒரு தோழியாகவும் இருக்க வேண்டும். அவள் கணவனுடனும் பிள்ளைகளுடனும் இருக்கும் பொழுதுகளில் உண்மை யிலேயே அகம் மகிழ வேண்டும். கணவருக்காகவும் பிள்ளைகளுக்காகவும் செய்யப்படும் செய்கைகள் சந்தோஷத்துடன் செய்யப்படும் பொழுது குடும்பம் ஆசீர்வதிக்கப்படுகிறது.

*2. இளம் பெண்கள் "தெளிந்த புத்தி"யுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (2:5).* இந்தச் சொற்றொடரானது ஒருவர் தம் புத்தியில் தெளிவாய் இருத்தலையும், விருப்பங்கள் மற்றும் தூண்டுதல்களைக் கட்டுப்படுத்து வதையும் உள்ளடக்குகின்றது.

*3. இளம் பெண்கள் "கற்புள்ளவர்களாய்"[9]* இருக்க வேண்டும். இந்த (அமெரிக்க) நாட்டில் திருமணம் முடிக்கும் பெண்களில் 7க்கு 1 பெண் கர்ப்பிணியாய் இருக்கையில், மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கருக்கலைப்பு நடைபெறுகை யில், தேவ பக்தியுள்ள முதிர்வயதுப் பெண்கள் மாம்ச சிந்தைக்கு எதிராகத் தொடர்ந்து ஆலோசனை அளிக்க வேண்டும் என்பது மிகவும் முக்கிய மானதாக உள்ளது. கற்பை நடைமுறைப்படுத்துவது எப்படி என்பதை இளம் பெண்களின் மனதில் ஆழப் பதியச் செய்வதற்கு அவர்கள் உதவ வேண்டும். நீதி. 5:1-23; 6:20-35; 7:1-27; 9:13-18; 1 தீமோ. 5:5-15; 1 தெச. 4:3-7; மற்றும் வெளி. 2:20-23 போன்ற வசனப் பகுதிகள் கவனமாய்ப் படிக்கப்பட்டு இன்றைய நாட்களில் இளம் பெண்கள் திருமணம் முடித்துக் கொள்வதற்கு முன்பு இவ்வசனங்கள் அவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

*4. இளம் பெண்கள் "வீட்டில் தரித்திருக்கிறவர்களாய்"* இருக்க வேண்டும். இது வேலை செய்தலையும் அது செய்யப்படுவதைப் பராமரித் தலையும் மறைமுகமாய்க் குறிக்கிறது. இல்லத்தைப் பராமரிக்கிற உணர்வை

இழக்கின்ற பெண்கள் அதிகமாகப் பணி சார்ந்தவர்களாய் ஆகி விடுகின்ற னர். நீதி. 31:10-31 வசனப் பகுதியானது தேவ (பக்தியுள்ள) பெண்கள் இல்லத்திற்கு வெளியேயுள்ள பணிகளிலும் ஈடுபடலாம் என்பதைத் தெளிவாக்குகையில், அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிப் பொறுப்பு இல்லத்தினுள் இருக்கிறது என்பதை நினைவில் வைத்தல் அவர்களுக்கு முக்கியமானதாக உள்ளது.

இல்லம் மற்றும் அதில் பெண்ணின் இடம் ஆகியவை உட்பட, தேவன் வடிவமைத்த யாவையும் நமது நன்மைக்காகவும் மகிழ்ச்சிக்காகவுமே இருக்கின்றன. இது இளம் வயது அல்லது முதிர்வயது உள்ள (எந்த) பெண்களாலும் நம்பப்படவும் மதிக்கப்படவும் வேண்டும். இயேசு சாத்தியப்படுவதற்காக வந்த நிறை வாழ்வை/பரிபூரண ஜீவனை வேறெந்த வழியிலும் பெண்கள் கண்டறிய முடியாது.

5. இளம் பெண்கள் "இரக்கமுள்ளவர்களாய்" இருக்க வேண்டும். இன்றைய நாட்களில் மனைவிகளும் தாய்களுமாய் உள்ள சிலர் தாங்கள் இல்லத்தைப் பராமரிக்க, தரைகளைச் சுத்தப்படுத்த, உணவுகளைத் தயாரிக்க, துணிகளைத் துவைக்க அல்லது பிள்ளைகளை வளர்க்கப் பொருத்தமானவர்கள் அல்ல என்று நினைக்கின்றார்கள்! இரக்கமாயிருப் பதற்கான பவுலின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து இல்லத்தில் வேலை செய்கிறவர்களாய் இருக்கும்படியான கட்டளையும், அந்த வேலையைச் செய்வதில் ஒரு மகிழ்வு மிக்க எண்ணப்போக்கிற்கான அழைப்பும் உடனடியாக வருகின்றன.

6. இளம் பெண்கள் தங்கள் சொந்த கணவர்களுக்குக் "கீழ்ப்படிதல்"[10] உள்ளவர்களாய் இருக்க வேண்டும். எபே. 5:22-24ல் பவுல், "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப் படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; … ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" என்று எழுதினார்.[11]

பவுல் ஒரு எச்சரிப்பையும் கூடுதலாய்க் கூறினார். இந்தப் பெண்களுக் கான போதனை, பயிற்சி, மற்றும் செய்முறை ஆகியவை தமது வழிகாட்டு தலின்படி இல்லாதிருந்தால், தேவ வசனமானது "தூஷிக்கப்படுவதா யிருக்கும்."[12] (1 பேது. 3:1-6; 2:11, 12ஐக் கவனிக்கவும்).

இன்றைய நாட்களில் சில பெண்கள், இந்தக் கொள்கைகள் காலாவதி யானவை என்றோ அல்லது பவுல் "பெண்ணுக்கு எதிரானவர்" என்றோ அறிவிக்கின்றனர். அவர்கள் தேவனுடைய வசனத்தை அறியாமல்/ உணராமல் அதைப் பற்றி அவதூறாகப் பேசிக் கொண்டிருக்கலாம். தேவனு டைய வசனத்தைத் தூஷித்தல் என்பது சிறிய விஷயமல்ல! மேலும், ஏவுதல் பெற்ற இந்த அறிவுறுத்துதல்களைப் பெண்கள் கைவிடுகின்ற பொழுது, அவர்கள் அதற்கான விலையை குடும்ப சண்டைகளிலும், இல்லம் சார்ந்த வன்முறையிலும், மற்றும் இல்லத்தில் உடைந்து போன இதயங்களிலும் செலுத்தித் தீர்க்க வேண்டியிருக்கும்.

## இளம் ஆண்கள் (வ. 6-8)

இளம் ஆண்களுக்கான பவுலின் பட்டியலும் சம அளவுக்கு அறைகூவல் விடுவதாகவே உள்ளது. இவற்றில் சில வலியுறுத்தத்தில் ஒன்றின் மேல் ஒன்று படிந்துள்ளது. தேவனுக்கான இந்த ஊழியர்கள் "மனத் தெளிவுள்ளவர் களாய்'' இருக்கும்படிக்கு மூன்று முறைகள் (2:2, 5, 6) அழைக்கப் படுகின்றனர்! இது ஒவ்வொரு வயதுக் குழுவினருக்கும் அவசியமான பண்பாகிய சுயகட்டுப்பாட்டின் மதிப்பை எதிரொலிக்கின்றது (கலா. 5:22ஐக் காணவும்).

தீத்து ஒரு இளம் மனிதராய் இருந்தார். ஆகையால் பவுல் முன்னிலை ஒருமைச் சொல்லைப் (நீ) பயன்படுத்தினார் - "நீயே எல்லாவற்றிலும் உன்னை ... மாதிரியாகக் காண்பித்து." ஒரு குறிப்பிட்ட மாதிரியை தானே செயல்படுத்தாமல் பிறரிடத்தில் அதைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிற இளம் சுவிசேஷ ஊழியர் எவரும் தம் உரையைக் கேட்பவர்களிடத்தி லிருந்து அதிக மரியாதையையோ அல்லது ஒத்துழைப்பையோ எதிர்பார்க்க முடியாது (ரோமர் 2:17-24ஐக் கவனிக்கவும்).

இளம் மனிதர்களுக்குப் பவுல் கூறிய இந்தத் தொடக்கக் கூற்றில் மூன்று விஷயங்கள் அடங்கியுள்ளன. வசனம் 7, "நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து" என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது.

1. "காண்பித்து"[13] என்ற வார்த்தை முக்கியமானதாக உள்ளது. ஒரு சுவிசேஷ ஊழியர் மக்களின் மத்தியில் இருக்க வேண்டும், மற்றும் அவர்களுக்குக் கூற வேண்டிய, காண்பிக்க வேண்டிய சிலவற்றை அவர் கொண்டிருக்க வேண்டும். சிலவற்றைக் கூறுதலுக்கும், கூறுதலுக்குச் சிலவற்றைக் கொண்டிருப்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடு உள்ளது. இது "காண்பித்து - மற்றும் - கூறுவதற்கான" வேளையாய் இருந்தது என்று பவுல் கூறினார்.

2. சுவிசேஷ ஊழியர் ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கின்றார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற மக்கள் நன்கு செயல்படுவார்கள். பின்வரும் மூன்று வசனப் பகுதிகளை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்: 1 பேது. 2:21-24; 1 கொரி. 11:1; 1 தீமோ. 4:12-16.

3. அவரது "நற்கிரியைகளை" (மத். 5:16; எபே. 2:10; கலா. 6:9, 10) மக்கள் காண்கின்றனர். இந்த நிருபத்தில் பவுல் "நற்கிரியைகள்'' என்ற கருத்தி லிருந்து ஒருக்காலும் வெகு தூரம் சென்று விடாதிருந்தார் (2:14; 3:1, 8, 14).

உபதேசமானது "தூய்மையில்" போதிக்கப்பட வேண்டும். சத்தியமானது ஒருக்காலும் களங்கப்படாது, வழக்கற்றுப் போய் விடாது, அழிந்து போய் விடாது அல்லது கடந்து போய் விடாது (மத். 24:35; யோவா. 12:48). சத்தியத்தைத் தவிர ஏதொன்றையும் போதிக்க நாம் ஏன் விரும்ப வேண்டும்? உலகமும் உலகப் பிரகாரமான கொள்கைகள் யாவும் ஒழிந்து போகும், ஆனால் தேவனுடைய சித்தத்தின்படி செய்கின்றவரோ என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறார் (1 யோவா. 2:17). ஊக்கத்துடன் நற்செயல்களைச் செய்து (மோசம் போக்கும் உபதேசத்திற்கு நேரெதிரான வகையில்) ஆரோக்கியமான

*உபதேசத்தை எடுத்துரைக்கும் எவரும் "மேன்மைப் படுத்தப்படுவார்."*

*"குற்றஞ் சாட்டப்படுதலுக்கு ஆளாகாத ஆரோக்கியமான பேச்சை" கொண்டிருக்கும் சகோதரர் ஒருவரைக் கட்டியெழுப்ப இந்தப் பண்புகள் யாவும் ஒன்று கலக்கின்றன. ஆரோக்கியமான உபதேசத்தை மிக முக்கியமானதென்ற வகையில் சுட்டிக்காட்டத் தொடங்கிய (2:1) பவுல் அதே வலியுறுத்தத்துடன், உபதேசத்திற்கு இசைவான வாழ்வுமுறை மற்றும் பேச்சு ஆகியவற்றின் முக்கிய தன்மையைக் கூடுதலாக உணர்த்துவதுடன் முடித்தார்.*

*சத்தியத்தைப் போதிப்பதில் ஒரு சுவிசேஷ ஊழியரின் பணிப் பொறுப்பை வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு தொகுத் துரைத்தார்:*

> (i) அவரது நோக்கங்கள் முற்றிலும் சுத்தமானவைகளாய் உள்ளன என்பது தெளிவாய் இருக்க வேண்டும். கிறிஸ்தவ போதகர் மற்றும் பிரசங்கியார் என்பவர் எப்பொழுதுமே குறிப்பிட்ட (சில) சோதனைகளினால் எதிர்கொள்ளப்படுகின்றார். எப்பொழுதுமே ஒருவர் தன்னைப் பற்றியே அறிவிக்கும் அபாயம் அங்குள்ளது. ஒருவர் தமது சுய புத்திசாலித்தனத்தையும், அறிவையும், ஞானத்தையும் செயல் விளக்கப்படுத்துதலின் சோதனை எப்பொழுதுமே உள்ளது. ஒருவர் தேவனுடைய செய்தியை நோக்கி என்பதற்குப் பதிலாக தம்மை நோக்கி கவனத்தைக் கவரும்படி நாடுதலுக்கான சோதனை எப்பொழுதும் உள்ளது. அதிகாரம் செலுத்துவதற்கான சோதனை எப்பொழுதுமே உள்ளது. போதகர், பிரசங்கியார், … ஊழியர் என்பவர்கள், சர்வாதிகாரியாய் இருக்கும்படியான சோதனையை எப்பொழுதும் எதிர்கொள்ளுகின்றனர். அவர் ஒரு நடத்துனராய் இருக்க வேண்டும், ஆனால் ஒருக்காலும் சர்வாதிகாரியாக/கட்டளை யிடுபவராக இருக்கக் கூடாது …
>
> (ii) அவர் மேன்மையுடையவராய் இருக்க வேண்டும். மேன்மை என்பது தனிப்பட்டு இருத்தலோ, அல்லது கர்வமாய் இருத்தலோ அல்லது பெருமையாய் இருத்தலோ அல்ல. கிறிஸ்துவின் தூதராய் இருத்தல் என்ற பேரச்சத்திற்குரிய பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற உணர்வே மேன்மை என்றுள்ளது. பிற மனிதர்கள் சிறுமைக்குக் குனியலாம்; இவர் இதற்கு மேலாக இருக்க வேண்டும் … பிற மனிதர்கள் தங்கள் இடம்/தகுதி மற்றும் மதிப்பு பற்றி தொடப்பட்டு அல்லது குற்றத்தை மேற்கொண்டிருக்கலாம்; இவர் தான் ஒரு இடத்தைக் கொண்டுள்ளதை மறந்துள்ள தாழ்மை உணர்வைக் கொண்டிருக்க வேண்டும் …
>
> (iii) இவர் ஆரோக்கியமான செய்தியைக் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்தவ போதகரும் பிரசங்கியாருமானவர் தமது சொந்தக் கருத்துக்களையல்ல ஆனால் சுவிசேஷத்தின் சத்தியங்களைப் பரப்புவதில் உறுதியாயிருக்க வேண்டும். பக்கக் கருத்து/விஷயங்களில் தனது காலத்தைச் செலவிடுதல் என்பதை விட சுலபமான வேறு விஷயம் எதுவும் போதகர் மற்றும் பிரசங்கியாருக்கு இருப்பதில்லை … ஒருவர் தனது சுயகருத்துக்களை அல்லது சில பிரிவினரின் ஆர்வத்தைப் பரப்புபவராக ஆன உடனேயே, அவர் தேவனுடைய வசனத்தைச்

செயல் வலிவாய்ப் போதிப்பவராக, அல்லது பிரசங்கிப்பவராக இருப்பதை விட்டொழித்து விடுகின்றார்.

தீத்துவின் மீது வைக்கப்பட்ட கடமை என்பது மாபெரும் பணியாய் உள்ளது, இது கிறிஸ்துவைப் பற்றி மனிதர்களிடத்தில் பேசுவதல்ல ஆனால் மனிதர்களுக்குக் கிறிஸ்துவைக் காண்பிப்பதாய் இருந்தது ... "முதலில் அவர் உருவாக்கப்பட்டார், பின்பு அவர் போதித்தார்" என்று கூறப்படுதலே ஒரு போதகருக்குச் செலுத்தப்படக் கூடிய மாபெரும் பாராட்டாக/வெகுமதியாக உள்ளது.[14]

ஒரு சுவிசேஷ ஊழியர் மக்களுக்கு முதலில் ஒரு உதாரணத்தைக் கொடுத்தல் அவசியம், பின்பு சத்தியத்தை (மட்டுமே) விளக்குவதாயிருக்கும் ஒரு விளக்கத்தைக் கொடுத்தல் அவசியம்!

## வேலைக்காரர்கள் (வ. 9, 10)

மீட்புக்கான தேவனுடைய திட்டமானது எந்த ஒரு சமூக மாதிரிக்கும்/ அமைப்புக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதை எந்த அல்லது எல்லா மட்டங்களிலும் கிறிஸ்தவ நடக்கையின் மூலமாக ஒரு இசைவுமிக்க மற்றும் மதிக்கக் கூடிய/மதிப்புமிக்க உறவுமுறையாக வார்ப்பிக்கவும் உருவாக்கவும் கூடியதாக உள்ளது. மத்தேயு 20:26-28 மற்றும் கலா. 3:26-28 வசனப் பகுதிகள் மக்களை ஒன்று கலக்கச் செய்து ஒருவர் மீதொருவர் அன்புகூரக் கூட வழிநடத்துகின்ற (யோவா. 13:34, 35) அடிப்படை நடைமுறைகளை முன் வைக்கின்றன. வசனங்கள் 9 மற்றும் 10 ஆகியவை கிறிஸ்தவ வேலைக்காரர்களை அவர்களின் பணிப் பொறுப்பை மதிக்கத் தக்க வகையில் நிறைவேற்றும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றன.

வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குக் "கீழ்ப்படிந்திருக்க" வேண்டும். இது 2:5ல் கூறப்பட்ட அதே எண்ணப்போக்காக உள்ளது. ஒரு வேலைக்காரர் தனது எஜமானரின் புத்தி கூறுதல் அல்லது அறிவுரைக்கு இணங்க வேண்டியது அவசியமாய் இருப்பதால் இந்த உறவுமுறையில் இது விசேஷித்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக உள்ளது. எனது குடும்பத்திற்கு (வழிவழியாய்) கையளிக்கப்பட்ட ஒரு கதையானது, தனது நிலத்தில் வேலை செய்ய வேலையாள் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்த எனது கொள்ளுத் தாத்தாவைப் பற்றிக் கூறுகின்றது. அவர் வேலி ஒன்றின் மீது கற்களை எறியும்படி ஒரு மனிதரிடம் கேட்டுக் கொள்ளுவார். அந்தப் பணி செய்யப்பட்ட பொழுது, கொள்ளுத் தாத்தா தான் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டதாகவும் கற்களை மீண்டும் (அவையிருந்த இடத்திற்கே) திருப்பி வீசும்படியும் அந்த மனிதரிடத்தில் கூறுவார். இந்த எண்ணத்தை மாற்றிய மாதிரியானது மூன்று முறைகள் செய்யப்பட்டது. அந்த வேலைக்கு விண்ணப்பித்தவர்களில் பெரும்பலோர், ஒன்று கோபம் கொள்ளுவார்கள் அல்லது எனது கொள்ளுத் தாத்தாவிடம் எண்ணத்தைச் சீராக்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்வார்கள். ஒரு மனிதர் கடமை உணர்வுடன் கற்களை வேலியின் மீது நான்காம் முறையாக வீசியெறிந்து கொண்டிருந் தார். அவர் ஏன் ஒன்றும் கூறவில்லை என்று கேட்கப்பட்ட பொழுது,

*அம்மனிதர், "திருவாளர் கீஸீ அவர்களே, அவைகள் உங்களுடைய கற்கள். அவற்றை வாரக் கணக்கில் நான் முன்னும் பின்னும் எறிந்து கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அது உங்கள் வியாபாரமாகவும் எனது வேலையாகவும் உள்ளது என்று நான் யூகிக்கிறேன்" என்று பதில் அளித்தார். எனது கொள்ளுத் தாத்தா அம்மனிதரை வேலைக்கு அமர்த்திக் கொண்டார், ஏனென்றால் அம்மனிதர் கீழ்ப்படிதலின் அர்த்தத்தை அறிந்திருந்தார்.*

*வேலைக்காரர்கள் ''நன்கு - பிரியப்படுத்துகிறவர்களாய்'' இருக்க வேண்டும். அவர்கள் ''எல்லாவற்றிலேயும்'' தங்கள் எஜமானர்களுக்கு மகிழ்வுடனும் மனவிருப்பத்துடனும் ஊழியம் செய்ய வேண்டும். இந்தப் பண்பானது வேலைக்கமர்த்துபவர்/வேலைக்கு அமருபவர் உறவுமுறை யிலும் நடைமுறைப்படுத்தப்பட முடியும். வேலைக்காரர்கள் தங்கள் முதலாளிகளின் முன்னிலையில் அவர்களை நன்கு பிரியப்படுத்துகிறவர் களாகவும், அவர் இல்லாத வேளையில் மரியாதையற்றவர்களாகவும் செயல்படுவதை நீக்கிப் போட வேண்டும். இப்படிப்பட்ட மாய்மாலமான நடக்கைக்குப் பவுல் இடமளிக்கவில்லை. அதுவே அவரது அடுத்த வலியுறுத்தமாயிருந்தது: வேலைக்காரர் என்பவர் "விவாதம் பண்ணுகிற வராய்" இருக்கக் கூடாது.*

*வேலைக்காரர் (அல்லது ஊழியர்) "திருடாமல்"[15] இருக்க வேண்டும் என்பது இன்னொரு முக்கியமான மாதிரியாக உள்ளது. இவ்விடத்தில் எண்ணப்போக்கானது, "அவர் செல்வந்தராக இருக்கிறார் அல்லது நிறுவனம் பெரிதாய் உள்ளது. நான் சிறிது எடுத்துக் கொண்டால் அது ஒன்றும் பாதிக்கப் போவதில்லை" என்பதாயிருக்கலாம்.*

*அந்தத் தவறான கருத்திற்கு நேர்மாறான வகையில் பவுலினால் விவரிக்கப்பட்ட வேலைக்காரர் (அல்லது ஊழியக்காரர்) "நல்லுண்மை யைக்"* (Gk.: *agathos*) *காண்பிக்க வேண்டியவராயிருக்கின்றார். இது 2:5ல் "நல்லவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தை யாக உள்ளது. இதை ஒரு நபரில் உள்ள "நல்ல மற்றும் சிறப்புமிக்க பண்பு களுக்காகச் சிறப்பிக்கப்படுதல், பண்பு … நேர்மை … பயன் நிறைந்த தன்மை … பிரயோஜனமாயிருத்தல்''[16] என்று ராபீன்சன் அவர்கள் விளக்கப்படுத்தினார்.*

*நடக்கையின் இந்த மாதிரியைப் பின்பற்றுகின்றவர்கள் உபதேசத்தை "அலங்கரிக்கையில்"[17] அதை ஆரோக்கியமாய்க் காத்துக் கொள்ளத் தாங்கள் பங்குப் பணியைச் செய்கின்றனர். வேதாகமத்தை அழகுமிக்கதாக ஆக்கும்படியாக மக்கள் வாழ முடியும். தெய்வீக ஆணைகள், சிலுவையின் ஆவிக்குரிய போர் வீரர்களின் வாழ்வில் காணப்படும் வேளையைக் காட்டிலும் அதிகம் மெய்சிலிர்க்க வைக்கக் கூடியவைகளாய் ஒருக்காலும் இருப்பதில்லை (2 கொரி. 3:2-6ஐக் காணவும்).*

## பாடம் 4: எல்லா கிறிஸ்தவ நடக்கைக்கான அடிப்படை (2:11-15)

மாறுபடும் தேவைகளுடன் இருந்த மக்களின் வித்தியாசப்பட்ட குழுக்களைப் பற்றி விவரித்த பிறகு, "எல்லாரும்" இரட்சிக்கப்பட முடியும் என்று பவுல் அறிவித்தார்! பவுல் தமது நடைமுறை மற்றும் ஏவுதல் பெற்ற அறிவுறுத்துதல் ஆகியவற்றை "க்கும்" (2:11) என்ற சாதாரண முன்னிடைச் சொல்லினால் அறிமுகப்படுத்தப்பட்ட "எல்லா மனிதர்களுக்"கான தேவனுடைய திட்டத்திற்கு ஒரு சூழ்நிலை போதனையுடன் தொகுத்துரைத்தார்.

### தேவ கிருபை (வ. 11-14)

பவுல் 2:11-14ல் பின்வருமாறு அறிவித்தார்:

> ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்.

#### சாத்தியக் கூறு (வ. 11)

தேவ கிருபை "பிரசன்னமாகி"யுள்ளது. (இப்பொழுது) வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதும், அறியப்பட்டதுமாயிருக்கிற இவ்விஷயமானது பல நூற்றாண்டுகளாக தேவனுடைய சிந்தையில் மட்டும் இருந்ததாகவும் மனிதருக்கு ஒரு இரகசியமாகவும் இருந்தது (ரோமர் 16:25-27; 1 பேது. 1:9-12; கலா. 4:4; 1 யோவா. 4:14; எபே. 3:3-11ஐக் கவனிக்கவும்).

#### செயல்முறை (வ. 12)

இரட்சிக்கப்பட்டவர்களாய் இருப்பதற்கு எல்லா மக்களும் அவர்களின் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது அவசியமாக உள்ளது (ரோமர் 5:12). ஒருவரின் பாவத்தைச் சுத்திகரிப்பதற்கு அவர் அல்லது அவள் "தேவபக்தியின்மை"[18] மற்றும் "உலக இச்சைகள்"[19] ஆகியவற்றை மறுத்து, தேவனுக்கு முன்பாக நேர்மையானவர்களாக வேண்டும் (2:12). பெருவயிற்றுச் சோம்பேறிகளாயிருந்த கிரேத்தர்களில் பலர் இந்த விருப்பங்களைப் பற்றியணைத்துக் கொண்டிருந்தார்கள்; இன்றைய நாட்களில் பலரும்

இதையே செய்கின்றார்கள். உலகத்தை நேசிக்கின்ற நபரிடத்தில் தேவன் மீதான அன்பு வளர முடியாது (1 யோவா. 2:15-17). கிறிஸ்தவர் உலகத்தில் இருந்தாலும், இந்த உலகத்தவராயிருப்பதில்லை (யோவா. 17:11-16).

கிறிஸ்தவ வாழ்வின் மாதிரியானது மூன்று மடங்கானதாக உள்ளது. முதலாவது, ஒவ்வொருவரும் "மனத் தெளிவுடன்" வாழ வேண்டும். இதே மூலவார்த்தை தீத்துவுக்கு எழுதிய நிருபத்தில் நான்கு முறைகள் காணப்படுகின்றது (2:2, 5, 6, 12), இது சுயகட்டுப்பாட்டுடன் இருக்கும்படி (மக்களை) அழைக்கின்றது. இது "(ஒருவர்) தமக்குத்தாமே உண்மையாயிருத்தல்" மற்றும் "ஒருவரின் நடத்தை" என்ற இரு கருத்துக்களுக்குமே பொருந்துகின்றது. இந்த நடத்தையானது ஒருவரைத் தம்முடன் சரியானவராக்கும், எல்லா நல்மனச்சாட்சியுடனும் வாழக் கூடியவராக்கும். இரண்டாவது, பவுல் கிறிஸ்தவர்கள் "நீதியுடன்" வாழும்படி அழைத்தார். இந்தக் கருத்தானது ஒருவரின் சுயத்திற்கு அப்பால் விரிந்து பிறருக்கு முன்பாக தகுந்த நடத்தையைக் காட்சிப் படுத்துவதற்கானதாக உள்ளது. மூன்றாவது, பவுல் நம்மை "தேவ பக்தியுள்ள"[20] வாழ்வு நடத்துவதற்கு அழைத்தார். இந்தச் சுருக்கமான கூற்று மனிதத் தேவையை முழுவதுமாக எடுத்துரைக்கிறது! இவ்விடத்தில் நாம் நமக்காகவும், பிறருடனும், தேவனுக்கு முன்பாகவும் சரியான வாழ்வை நிலைநாட்டும்படி அறிவுறுத்தப்படுகின்றோம். பவுல் எல்லா உறவுமுறைகளையும் எடுத்துரைத்து முடித்தார்.

### வாக்குத்தத்தம் (வ. 13)

தேவ கிருபை பிரசன்னமானது மட்டுமின்றி (வ. 11) அது "மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கு" (2:13) எதிர் நோக்குவதற்கான கதவை நமக்காகத் திறக்கின்றது. அந்த மகா மேன்மையான இரட்சகரின் அல்லது அவருடைய மகிமையுள்ள பிரசன்னத்தின் சிறப்பு அழிந்து போகும் மனிதனால் எந்த வழியிலும் புரிந்து கொள்ளப்பட அல்லது எழுதப்பட முடிவதாய் இருப்பதில்லை (மத். 17:1-5; யோவா. 1:18; 14:8, 9; 17:1, 5, 24), ஆனால் தற்காலத்தில் உறுதியாய் நிற்குதலுக்கு இது என்ன ஒரு "பாக்கியமான நம்பிக்கையாகவும்'' வல்லமை மிகுந்த செல்வாக்காகவும் உள்ளது (1 யோவா. 3:1-3).

உண்மையிலேயே, இயேசு தேவனாயிருக்கிறார். ஏவுதல் பெற்ற இந்த உண்மையை மறுக்கும் எந்த ஒரு மத அமைப்பும் அந்தி கிறிஸ்துவின் ஆவியாகவே உள்ளது (1 யோவா. 4:1-6ஐக் காணவும்). அந்தத் தெய்வீக மானவர் ஒரு நாளில் வரும்பொழுது, கண்கள் யாவும் அவரைக் காணும் (வெளி. 1:7).

### விலை (வ. 14ஆ)

அவர் "நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என்பதால் நமது நம்பிக்கை நம்பத்தக்கதாக உள்ளது. பவுல், ரோமர் 5:1-11ல் பின்வருமாறு எழுதினார்:

... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சய மாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்.

*சபையைப் பரிசுத்தமாக்குவதற்காக இயேசு தம்மைத் தாமே அதற்குக் கையளிக்குமளவுக்கு சபையின்மீது இயேசு அன்புகூர்ந்ததால், பவுல் சபையினிமித்தமான தமது சொந்தபாடுகளில் மகிழ்வடைந்தார் (எபே. 5:25-27; கொலோ. 1:24-27ஐக் காணவும்).*

### நோக்கம் (வ. 14அ)

முதலாவது, கிறிஸ்து மனித குலத்தை “மீட்க”[21] முடிவதற்காக தம்மைத் தாமே கையளித்தார்/ஒப்புக் கொடுத்தார். உண்மையாகவே அவர் நம்மைச் “சகல அக்கிரம செய்கை”யிலிருந்தும் மீட்க முடியும்! அவர் தம் மூலமாக தேவனிடத்தில் நெருங்குகிற யாவரையும் முற்றிலும் இரட்சிக்கக் கூடியவராய் இருக்கிறார் (எபி. 7:25; 5:8, 9). அவர் நமது பாவங்களுக்காக மட்டுமின்றி முழு உலகத்தாரின் பாவங்களுக்காகவும் மரித்தார் (1 யோவா. 2:1, 2; 2 கொரி. 5:14, 15).

இரண்டாவது, நீதியுள்ள தேவனுக்கு முன்பாக நாம் மீட்கப்பட்டவர் களாயிருக்கும்படி, இயேசு நம்மைச் “சுத்திகரிக்க”[22] வந்தார். பாவத்தி லிருந்து விடுதலையாக்கப்பட்ட சிலர் தாங்கள் புது சிருஷ்டிகளாய் (ரோமர் 6:3-18; 2 கொரி. 5:17) ஆகியுள்ளதைக் காணாமல், இன்னமும் குற்றத்தின் நிழலின் கீழேயே வாழ்கின்றனர். இயேசுவின் பலியானது “அவருக்கென்று ஒரு மக்கள் கூட்டத்தைச் சுத்திகரிப்பதற்கானதாக” இருந்தது (2 கொரி.

6:16ஆ-18ஐக் காணவும்). இப்பொழுது நாம் அவரால் சொந்தம் கொள்ளப்பட்டுள்ளோம் (1 கொரி. 6:19, 20), இது ஒரு மகிமை பொருந்திய சிந்தனையாக உள்ளது!

மூன்றாவது, ''நற்செயல்களைச் செய்வதற்கு வைராக்கியமாய்'' இருக்கிற மக்களைக் கொண்டிருத்தல் என்பதே அவருடைய இலக்காக இருந்தது. 2ம் அதிகாரம் கொடுத்துள்ள மாதிரியை அவருடைய மக்களில் எத்தனை பேர் கண்ணோக்கியிருந்து, அதன் பிறகு அதன்படி வாழ்வதற்கான விருப்பத்தினால் *பற்றி எரிகின்றனர்?* தேவனுடைய நோக்கத்தின் சங்கிலித் தொடரில் நீங்கள் எந்த இடத்தில் இருக்கின்றீர்கள்?

## பவுலின் கட்டளை (வ. 15)

தீத்துவுக்குப் பவுல், "இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்து கொள் ..." என்று கூறினார் (2:15). இந்த இன்றியமையாத, மாதிரியை அமைக்கின்ற, மற்றும் நம்பிக்கையை கொடுக்கின்ற சத்தியங்கள், இவற்றை ஒருக்காலும் கேட்டிராதவர்களிடத்தில் பேசப்பட[23] வேண்டும். பிறர் அறிய அனுமதிக்க வேண்டியது நிச்சயமானதாயிருக்கிறது என்பதே இங்கு கருத்தாக உள்ளது. இன்னொரு வேளையில், அல்லது பிறருக்கு, பேசுபவர் "புத்தி கூறுவது"[24] அவசியமாயிருக்கும். தேவைப்பட்டால், ஒரு சுவிசேஷ ஊழியர் "கடிந்து கொள்ள"[25] தயாராய் இருக்க வேண்டும். இது சகல அதிகாரத்துடனும் செய்யப்பட வேண்டும் (மத். 28:18, 19). தேவன் தமது குமாரனின் பாடுகள் மற்றும் பலியின் மூலமாக எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்துள்ள தெய்வீக கிருபையையும் பலன்களையும் மக்களுக்கு (அறிவிக்க/அளிக்க) மறுக்கத் துணிகிற எவரொருவரின் (செயலும்) வெளிப்படுத்தப்பட வேண்டும்!

தொகுப்புரையில், பவுலின் கட்டளையானது, ஒரு சுவிசேஷ ஊழியரை எல்லாருக்கும் தகவல் அறிவிக்கும்படியும், சிலருக்குப் புத்தி கூறும்படியும், (மற்ற) பிறரை வெளிப்படுத்தும்படியும் அழைக்கிறது. ஒரு சுவிசேஷ ஊழியர், தம்மை "ஒருவரும் அசட்டை பண்ண இடங்கொடுக்கக் கூடாது." பவுல் பரிந்துரைக்கும் வகையில் பேசி, போதித்து, பிரசங்கிக்கும் எந்த சுவிசேஷ ஊழியரும் இந்த சத்தியங்களைப் போதிக்கையில் தமது உரையைக் கேட்பவர்களில் பாதிப் பேர் கண்ணுறங்கும் நிலையைக் கொண்டிருக்க மாட்டார். விளக்கமும் இலக்கண வடிவமும் நிகழ்காலக் கட்டளைச் சொல்லாய் இருத்தல் என்பது சுவிசேஷ ஊழியர் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும் என்பதை எதிரொலிக்கிறது. (1) பேசுதல், (2) தொடர்ந்து பேசுதல், (3) மாறுபட்ட தேவைகளைச் சந்திக்கும் வகையில் பல்வேறு வழிகளில் போதித்தல், மற்றும் (4) ஒவ்வொரு நபருக்குமான தேவகிருபையின் தனிச் சிறப்பை எவரொருவரும் புறக்கணித்து விடாத வழி வகையில் போதித்தல்!

*குறிப்புகள்:*

[1]*ஆரோக்கியமான* (Gk.: *hugiaino*) - *"சுகமாய், நன்றாய் இருத்தல் ... ஆரோக்கிய மாய், தவறின்றி இருத்தல் ... கிறிஸ்தவ உபதேசம் மற்றும் வாழ்வு ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உறுதியாக, தூய்மையாக, சரியாக, இருத்தல், தீத்து 1:13; 2:2 ... ஆரோக்கியமான உபதேசம் ... உண்மை, தூய்மை, மோசமாக்கப்படாதது, 1 தீமோ. 1:10; 6:3; 2 தீமோ. 1:13; 4:3; தீத்து 1:9; 2:1"* [Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 736). [2]*ஜாக்கிரதை* (Gk.: *hephalios*) - *"தெளிவான ... விசேஷமாய் மதுபானத்தைப் பொறுத்தமட்டில் ... தெளிவான சிந்தையுள்ள, கவனம் நிறைந்த, எச்சரிக்கையான"* (Robinson, 480). [3]*நல்லொழுக்கம்* (Gk.: *semnos*) - *"மதிப்புயர்வு வாய்ந்த, வணங்கத்தக்க, பயபக்தி செலுத்தப்படத் தக்க; பண்புக்காக வணங்கப்படத் தக்க, மதிக்கப்படத் தக்க, ... 1 தீமோ. 3:8, 11; தீத்து 2:2 ... பிலி. 4:8"* (C.G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint, ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 573). [4]*தெளிந்த புத்தி* (Gk.: *sophron*) - *"ஒருவரின் கருத்துணர்வுகளில்/புலன்களில் தெளிவு ... ஒருவர் தம் இச்சைகளையும் தூண்டல்களையும் கட்டுப்படுத்துதல் ... தீத்து 1:8; 2:2, 5"* (Thayer, 613)*; "... மனதின் தெளிந்த தன்மை, இச்சைகள், உணர்வுகள், நடக்கை ஆகியவற்றை மிதமாய்க் கட்டுப்படுத்துதல்"* (Robinson, 707). [5]*1 தீமோ. 2:11-15க்கான குறிப்புகளில் பெண்கள் ஆண்களுக்குப் போதித்தல் உட்பட அவர்கள் போதிக்கக் கூடிய வழிமுறைகளைக் காணவும்.* [6]*பரிசுத்தத்துக்கேற்ற விதம்* (Gk.: *hieroprepes*) - *"பரிசுத்த இடமாக அல்லது நபராக ஆகின்ற நடக்கை ... பரிசுத்தமான, பயபக்திக்குரிய, தீத்து 2:3 ... கிறிஸ்தவப் பணியை அலங்கரிக்கும் நடக்கை"* (Robinson, 346). [7]*உற்சாக மூட்டுதல்* (Gk.: *sophronizo*) - *"ஒருவரை அவரது உணர்வுகளுக்கு மீளக் கட்டியெழுப்புதல், மிதப்படுத்துதல், கடிவாளமிடுதல், ஒழுங்கு படுத்துதல், ஒருவரை அவரது கடமைக்குப் பற்றியிருக்கச் செய்தல் ... தீத்து 2:4"* (Thayer, 613). [8]*அன்பு* (Gk.: *philandros*) - *"தனது கணவனை அன்பு செய்தல்: தீத்து 2:4." Phileo என்ற மூலமானது, "அன்பு செய்தல், ஒருவருக்கு நட்புறவாயிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது ... (ஒன்றில்) அகம் மகிழ்தல், (ஒன்றிற்காக) ஏங்குதல் ... சந்தோஷத்துடன் செய்தல் ... முத்தமிடுதல் ... ஒருவரிடத்தில் இரக்கத்துடன் நடந்து கொள்ளுதல்; Philein என்பது அறிவு (புத்தி) மற்றும் உணர்வினால் தூண்டப்படும் விருப்பத்தைக் குறிக்கிறது"* (Thayer, 653). [9]*கற்பு* (Gk.: *hagnos*) - *"உணர்வெழுச்சி யூட்டும் பயபக்தி, வணங்கத்தக்க தன்மை, பரிசுத்தம் வாய்ந்த தன்மை ... மாம்சத் தன்மையிலிருந்து/இச்சையிலிருந்து சுத்தமாயிருத்தல் ... தன்னடக்கம், தீத்து 2:5"* (Thayer, 8)*; "... ஒன்றுமறியாத் தன்மை, குற்றமற்ற தன்மை ... பிலி. 4:8; 1 தீமோ. 5:22 ... 1 பேது. 3:2"* (Robinson, 9). [10]*கீழ்ப்படிந்திருத்தல்* (Gk.: *hupotasso*) - *"கீழ் (இருக்கும்படி) ஏற்பாடு செய்தல் ... ஒருவர் தன்னைக் கீழ்ப்படுத்துதல், கீழ்ப்படிதல்; ஒருவரின் கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிதல்; ஒருவரின் புத்திமதி அல்லது அறிவுரைக்கு இணங்குதல்"* (Thayer, 645).

[11]*1 தீமோ. 2:9-15 வசனப் பகுதி தொடர்பாக கீழ்ப்படிதல் மீதான விவாதத்தை/ கலந்துரையாடலைக் காணவும்.* [12]*தூஷித்தல்* (Gk.: *blasphemeo*) - *"அவதூறாகப் பேசுதல், நிந்தித்தல், திட்டுதல் ... தீமையாகப் பேசுதல் ... விரோதமான பேச்சினால் தேவனுக்கு அல்லது பரிசுத்தமானவைகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய பயபக்தியில் வேண்டுமென்றே குறைவுபடுதல்"* (Thayer, 102). [13]*காண்பித்தல்* (Gk.: *parecho*) - *"முன் சென்றடைதல், அளித்தல், காண்பித்தல், கொடுத்தல், தருதல் ... ஒருவர் பெற்றிருக்கக் காரணமாகுதல்; கொடுத்தல், கொண்டு வருதல், ஒருவருக்குச் சிலவற்றுக்குக் காரணமாகுதல், ... ஒருவர் தன்னை அளித்தல்"* (Thayer, 488).

[14]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 289-90. [15]*திருடுதல்* (Gk.: *nosphizo*) - "*தனியே எடுத்து வைத்தல், தனிப்படுத்துதல், பிரித்தல் ... ஒருவர் தன்னகத்தே பிரித்தல் ... தன்னுடையதல்லாததைத் தனக்காகச் செலவிடுதல்*" (Thayer, 429). [16]Robinson, 3-4. [17]*அலங்கரித்தல்* (Gk.: *kosmos*) - "*தகுதியான/பொருத்தமான மற்றும் இசைவான ஏற்பாடு ... ஒழுங்கு முறை ... ஆபரணம், அலங்கரிப்பு*" (Thayer, 356). [18]தேவபக்தியின்மை (Gk.: *asebeia*) - "*தேவனிடத்தில் (செலுத்தும்) பயபக்தியில் குறைபாடு, பக்தியின்மை, ... ரோமர் 1:18; 2 தீமோ. 2:16; தீத்து 2:12 ... அவபக்தியின் செய்கைகள்*" (Thayer, 79). [19]*இச்சைகள்* (Gk.: *epithumia*) - "*இச்சை, ஏக்கம், மிகுந்த விருப்பம், தடை செய்யப்பட்டுள்ளதன் மீதான விருப்பம்*" (Thayer, 238-9). [20]தேவ பக்தியுள்ள (Gk.: *eusebos*) - "*பக்தியுள்ள, தேவபக்தியான ... 2 தீமோ. 3:12; தீத்து 2:12*" (Robinson, 307).

[21]*மீட்டல் (Gk.: lutroo)* - "*மீட்கும் பொருளைப் பெற்றுக் கொண்டு விடுவித்தல் ... மீட்புக் கிரயத்தை செலுத்துவதினால் விடுதலையாக்குதல் ... துன்மார்க்கத் திலிருந்து ... விடுவித்தல்*" (Thayer, 384). [22]*சுத்திகரித்தல்* (Gk.: *katharizo*) - "*சுத்திகரிக்க ... ஒழுக்கம் சார்ந்த கருத்தில்: ... பாவத்தின் தீட்டுப்படுதலில் இருந்து விடுவித்தல் ... துன்மார்க்கத்திலிருந்து சுத்திகரித்தல் ... பாவத்தின் குற்றத்திலிருந்து விடுதலையாக்குதல், சுத்திகரித்தல்*" (Thayer, 312). [23]பேசுதல் (Gk.: *laleo*) - "*ஒருவர் அமைதியாயிருப்பதைப் பற்றியதற்கு எதிரானது; அமைதியாய் இராது இருத்தல் ... கூறுதல் ... ஒருவரின் சிந்தையை அறிவித்து ஒருவரின் சிந்தனைகளை வெளிப்படுத்துதல்*" (Thayer, 268-70). [24]*புத்தி கூறுதல்* (Gk.: *parakaleo*) - "*இரத்தல், வேண்டுகோள், கெஞ்சிக் கேட்டல், ஆறுதல், தேற்றுதல், முதலியன*" (Thayer, 482-83). [25]*கடிந்து கொள்ளுதல்* (Gk.: *elegcho*) - "*குற்றம் உணர்த்துதல், மறுத்துரைத்தல், தவறுணர்த்தி வலியுறுத்துதல், தவறை வெளிப்படுத்துதல், முதலியன*" (Thayer, 202-3).